
எஸ். எச். எம். ஜெமீல்



# கலாநிதி பதியுத்தீன் மஹ்மூதின் கல்விப் பணிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாநிதி பதியுத்தீன் மஹ்மூதின் கல்விப் பணிகள்

KARTHIGESU SIVATHAMBY
B.A. (Sri L), Ph.D (Birm)
PROFESSOR OF TAMIL
UNIVERSITY OF JAFFNA
JAFFNA - SRI LANKA

*அல்ஹாஜ் எஸ். எச். எம். ஜெமீல்*
*பீ. ஏ. (விசேட) ; கல்வி டிப்ளோமா ; எம். ஏ*

இஸ்லாமிய நூல் வெளியீட்டுப் பணியகம்
வெளியீடு : 18

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| Title | : | Educational Contributions of Dr. Alhaj Badiudin Mahmud |
| Author | : | Alhaj S. H. M. Jameel<br>B.A. (Econ. Sp.) ; Dip Ed.;M.A<br>Advisor,<br>Ministry of Cultural & Religious Affairs,<br>Colombo |
| Publisher | : | Islamic Book Publishing Centre,<br>Sainthamaruthu,<br>Sri Lanka. |
| Printer | : | Pacific Press (Pvt) Ltd., Colombo |
| First Edition | : | 1 October, 1997 |
| Copy Right | : | (C) Author |
| Price | : | Rs. 30/= |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Message of Condolence
## by Hon. LAKSHMAN JAYAKODY M.P.
### Minister of Buddha Sasana and Cultural & Religious Affairs

I am very much grieved at the sad news of the demise of Dr. Badi - ud-din Mahmud.

Dr. Badi-ud-din Mahmud who was 93 years was undoubtedly a great leader not only of his community, but also at the national level. As Founder Co- Secretary of the Sri Lanka Freedom Party, he gave every assistance to late S.W.R.D. Bandaranaike to build the Party and acted as advisor to form the government in 1956 and up to the last day he had been a tower of strength to the party and to the successive governments. He had been one of the longest serving Education Ministers in a Cabinet.

He was a fearless Minister who made decisions to formulate a new system of education when the others feared to tred.

As a community leader, he brought the Muslims from the educational backwardness to a very high pedestal by which the community was able to leap forward in the field of education. Today the increase in the number of Muslim teachers, the expansion of the Training Colleges, increase in the number of educated youths in public service are all results of the pioneering efforts by Dr. Badi-ud-din Mahmud.

I note with appreciation that Badi-ud-din Mahmud always lived for the betterment of his community within the framework of the unity and harmony of the nation. He rendered a selfless service and contributed to the development of his community and the country in the best possible manner. His death is a loss to the entire country.

**Lakshman Jayakody**

*Courtesy : Daily News, June 17, 1997*

SIVATHAMBY
PROFESSOR OF TAMIL
UNIVERSITY OF JAFFNA
SRI LANKA



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசியத் தலைவரும்; துறைமுக அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சரும், ஜனாதிபதி சட்டத்தரணியுமான மாண்புமிகு அல்ஹாஜ் எம். எச். எம். அஷ்ரஃப் எம். பி. அவர்களின் இரங்கற்பா

## சிங்கத்தின் பெருஞ்சீற்றம் சிறு குழியுள் அடங்கியதா ?

ஒரு யுகத்தின் தாரகை
ஓய்வெடுக்கச் சென்றதுவோ?
பெருமரம் தன்னிடத்தை
பெற்றவர்க்கு கொடுத்ததுவோ?
கருங்குயில்தன் கவிதையினை
இசைத்ததினால் களைத்ததுவோ?
பெரும்படகு தன் பயணம்
முடிந்ததினால் கவிழ்ந்ததுவோ?

'மண்ணூர்'த் தாய்மடியில்
மலர்ந்த செந்தாமரைப்பூ
தொண்ணூற்றி மூன்றாண்டு
தலைநிமிர்ந்து சிரித்ததுவோ?
கண்ணழகுத் தாரகைகள்
காத்திருத்தல் தவறென்று
விண்ணுக்கு விரைகின்ற
முடிவினையும் செய்தாரோ?

அலிகார் பல்கலைக் கழகத்தை
அதிரவைத்ததொரு பெரும் சிங்கம்,
அகில இந்திய மாணவர்கள்
அணைத்தெடுத்த பெரும் தலைவன்,
காந்தி, நேரு, பட்டேலுடன்
காயிதே ஆஸம் ஜின்னா, இக்பால்
சேர்ந்து மலர்ந்த பூந்தோட்டத்தில்
சிரித்து ஆடிய இளங்காற்று!

வெள்ளி நாக்கால் உள்ளங்களை
கொள்ளை கொண்ட பெரும் தலைவன்!
துள்ளி எழுந்து போருக்கு
துடித்துப் பாய்ந்த வாள்வீச்சு!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அள்ளிக் கொடுத்து கல்விக்காய்
அருஞ்சேவை செய்ததொரு சீதக்காதி
வெள்ளி இறக்கைகளில் வானத்தில்
விளையாடச் சென்றதும் விதியாமோ?

"என் சமூகம் தூங்குகையில் நான் தூங்கேன்!"
என்றாயே! உழைத்திட்ட இராஜதேனீ!
தம்சமூகம் விழித்ததைக் கண்டே இன்று,
"நான் தூங்கப் போகின்றேன்" என்றபோது,
வெண்தாடி முழுவதுமே நிறைந்து நிற்கும்
விண்ணுலக ஊஞ்சல்கள் அத்தனைக்கும்
முன்கூட்டி ஒதுக்கீடு செய்துவிட்டு
முகமலர்ந்து காத்திருக்கும் ஹூருலீன்கள்
வழிமறித்து நிற்க நாம் விரும்பவில்லை!

விழிகளிலே வழிந்தோடும் நீர்த்துளிகள்
வீதிகளில் விழுந்ததெனில் பெருகும் வெள்ளம்
வழிநெடுக வானவர்கள் மலர் சொரிந்து
வாழ்த்துக்கள் பாடியுமை கூட்டிச் செல்வார்!
இறைநேசர் மழையினிலே நீங்கள் நீந்த
இருகரங்கள் ஏந்தியே நாம் உருகுவோமே!

*எம். எச். எம். அஷ்ரஃப்*

*நன்றி : தினகரன், 17 ஜூன் 1997*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொழும்பு சாஹிராக் கல்லூரியில் நூலாசிரியரின் ஆசானாகவும்; கல்விப் பணிப்பாளர், கம்பளை சாஹிராக் கல்லூரி அதிபர் ஆகிய பதவிகளை வகித்த காலங்களில் கலாநிதி பதியுத்தீன் மஹ்மூதின் மிக அன்புக்கும், நம்பிக்கைக்கும் உரியவராகவும் திகழ்ந்த வரலாற்றாய்வாளர் அல்ஹாஜ் ஏ. எம். சமீம் அவர்களின் சிறப்புரை

ஜனாப். ஜெமீல் அவர்களின் "கலாநிதி பதியுத்தீன் மஹ்மூதின் கல்விப் பணிகள்" என்ற நூல் அளவில் சிறியதாய் இருந்தாலும், அதன் உள்ளடக்கம் மிகவும் பரந்திருக்கிறது. இலங்கையின் இருபதாம் நூற்றாண்டின் வரலாற்றில், சிறப்பாக, இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றில், ஒரு பெரும் செல்வாக்கை ஏற்படுத்திய ஒரு மாபெரும் கதாநாயகனின் வாழ்க்கை வரலாற்றை இந்நூல் கொண்டுள்ளது.

கலாநிதி பதியுத்தீன் மஹ்மூத் முஸ்லிம் சமூகத்திற்கு ஆற்றிய சேவை அளப்பரியது. அரசியல், சமூகம், கல்வி என்ற இத்துறைகளில் அவர் முஸ்லிம் சமூகத்திற்கு ஆற்றிய சேவை, அவர் 1939 ம் ஆண்டில் தனது பட்டப்படிப்பை அலிகார் சர்வகலாசாலையில் முடித்துக் கொண்டு இலங்கை திரும்பியதும் ஆரம்பமான அவருடைய சமூகச் சேவையின் காலத்தில் முஸ்லிம்களின் அரசியல், சமூக, கல்வி நிலையோடு; அவர் 1997ம் ஆண்டில் மறைந்த வேளையில் இருந்த முஸ்லிம்களின் நிலையோடு ஒப்பிட்டுப் பார்க்கையில் அவருடைய சேவையின் தாற்பரியம் விளங்கும்.

1939ம் ஆண்டில், சட்டசபையில் முஸ்லிம்களுக்கென்று தொகுதிவாரி யாகத் தெரிவு செய்யப்பட்ட ஓர் அங்கத்தவர் கூட இல்லாதிருந்த ஒரு பரிதாப நிலையில், அரசியல் அனாதையாக முஸ்லிம் சமூகம் இருந்தது. ஆனால், 1997 ம் ஆண்டில் மக்கள் முன்னணி அரசாங்கத்தில், மூன்று அமைச்சர்களோடு, இரண்டு பிரதி அமைச்சர்களும் இருக்கின்றனர். ஒரு முஸ்லிம் அரசியல் கட்சியின் உதவியோடு இவ்வரசாங்கம் நிறுவப்பட்டிருக்கிறதென்றால் முஸ்லிம் களின் அரசியல் செல்வாக்கு இக்காலப்பகுதியில் எவ்வளவு வளர்ந் திருக்கின்றதென்பது சொல்லாமலேயே விளங்கும். 1939 ம் ஆண்டில் அகில இலங்கை முஸ்லிம் அரசியல் மகாநாடொன்றை அவர் ஆரம்பித்து முஸ்லிம் சமூகத்தில் அவர் ஏற்றிய விளக்கு, 1997 ம் ஆண்டில் சுடர்விட்டுப் பிரகாசிப்பதை நாம் காணலாம். முஸ்லிம் சமூகத்தின் அரசியல் எழுச்சிக்கு அவரும் முக்கிய காரணமென்றால் அதை யாராலும் மறுக்கவோ, மறைக்கவோ முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு சமூகத்தின் கல்வி நிலையைக் கணிப்பதற்கு, அச்சமூகத்தில் எத்தனை சர்வகலாசாலைப் பட்டதாரிகள் இருக்கிறார்கள் என்பது ஓர் அளவுகோல். இலங்கைப் பல்கலைக்கழகக் கல்லூரி ஆரம்பமான காலந்தொட்டு ஏறக்குறைய 1960 ம் ஆண்டு வரையிலான காலப் பகுதியில் இலங்கைச் சர்வகலாசாலையில் முஸ்லிம் மாணவர்களின் எண்ணிக்கை விரல் விட்டு எண்ணக்கூடியதாக இருந்தது. சர்வகலாசாலையின் முழு மாணவர் தொகையில் 1% தான் முஸ்லிம் மாணவர்களாக இருந்தார்கள். ஆனால் இன்றையக் கணக்கெடுப் பின்படி, 7% தற்போது எல்லா சர்வகலாசாலைகளிலும் கல்வி பயில்கின்றார்கள். கலாநிதி பதியுத்தீன் மஹ்மூத் 1960-1964 ஆண்டுக் காலப்பகுதியிலும், 1970-1977ம் ஆண்டு காலப்பகுதியிலும், கல்வி அமைச்சராகவிருந்து ஆரம்பித்த மகா வித்தியாலயங் களும், மத்திய மகா வித்தியாலயங்களும், இவ்வித்தியாலயங்களுக்கு நியமித்த அதிபர்களும், ஆசிரியர்களும் இவ்விகிதாசாரம் வளர்வதற்கு முக்கிய காரணங்கள் என்றால் அது மிகையாகாது. முக்கியமாக அவர் அமுலுக்குக் கொண்டு வந்த தரப்படுத்தல், மாவட்டக்கோட்டா என்பன கிழக்கிலங்கை முஸ்லிம் மாணவர்களுக்கு ஒரு வரப்பிரசாத மாக அமைந்தது.

அவருடைய பணி மகாவித்தியாலயங்களின் எண்ணிக் கையைக் கூட்டுவதி லும், முஸ்லிம் அதிபர், ஆசிரியர்களை அதிகமாக நியமித்தலிலும் மாத்திரம் தங்கியிருக்கவில்லை. முஸ்லிம் சமூகத்தில் ஒரு விழிப்புணர்ச்சியையும், ஒரு புதிய பரம்பரையினரையும் உருவாக் கியதில்தான் அவருடைய சேவை தங்கியிருக் கின்றது.

ஜனாப். ஜெமீல் இந்நூலில் எழுதியிருப்பதைப்போல், பதியுத்தீன் மஹ்மூத் 1924ம் ஆண்டில் முஸ்லிம் வாலிபர் லீக் இயக்கத்தின் செயலாளராகவும், பின்பு அவர் 1939ம் ஆண்டில் நாடு திரும்பியபோதும், முஸ்லிம்களின் அரசியல் நல்வாழ்வுக்காக அன்று இயங்கிக் கொண்டிருந்த முஸ்லிம் வாலிபர் லீக் "ஆங்கிலம் கற்று வர்த்தகத்திற் பணம் ஈட்டிய ஆங்கிலேயரோடு ஒத்துழைக்கும்" உயர்வர்க்கத்தினரின் அதிகாரத்தில் இருந்தது. அவர்கள் அரசியல் சலுகைகளுக்காக அரசாங்கத்திடம் யாசித்திருந்தனர். இந்தத் தாழ்வு மனப்பான்மையிலிருந்து முஸ்லிம்கள் விடுபடவேண்டுமென்றும், தங்கள் உரிமைக்காகப் போராட வேண்டும் என்றும் சமூகத்திற்குக் கற்றுக் கொடுத்தவர் பதியுத்தீன் மஹ்மூத் அவர்களே.

உதாரணமாக, முஸ்லிம் பாடசாலைகளில் 75சத விகிதத்தினர் முஸ்லிம் களாக இருந்தாலும், அது ஒரு தமிழ் தலைமை ஆசிரியரைக் கொண்டதாகவும் இருந்த நிலைமையை மாற்றி 51சதவிகிதத்தினர் முஸ்லிம் மாணவர்களாக இருந்தால் ஒரு முஸ்லிம் பாடசாலையாகக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணிக்கப்பட்டபோது ஒரு முஸ்லிம் தலைமை ஆசிரியரைக் கொண்டதாக இருக்க வேண்டும் என்ற சட்டத்தை 1956ம் ஆண்டில் அரசாங்கம் அமுலுக்குக் கொண்டு வருவதற்கு பின்னனியில் இருந்தவர் பதியுத்தீன் மஹ்மூத் அவர்களே.

1956ம் ஆண்டு வரைக்கும் முஸ்லிம் சமூகம் ஐக்கிய தேசியக் கட்சியை ஆதரித்த நிலையில் அரசியல் தீர்க்க தரிசனத்துடன் செயல்பட்டவர்தான் பதியுத்தீன் மஹ்மூத். முஸ்லிம் தலைவர்களெல்லாம் ஒரு பக்கம் நிற்க, அன்றைய அரசாங்கத்திலிருந்தும் விலகி சிறிலங்கா சுதந்திரக்கட்சி என்ற ஒன்றை ஒரு சிலருடன் பண்டாரநாயக்கா ஸ்தாபித்த சமயத்தில், அவருக்குப் பக்கபலமாக நின்று முஸ்லிம் சமூகத்தின் எதிர்கால அரசியல் வளர்ச்சிக்கு வித்திட்டார் பதியுத்தீன் மஹ்மூத். அவருடைய அரசியல் கொள்கையைப் பார்த்துப் பரிகசித்த ஏனைய முஸ்லிம் தலைவர்கள், 1956ம் ஆண்டில் பண்டாரநாயக்கா பொதுத்தேர்தலில் அமோக வெற்றியைப் பெற்று மக்கள் அரசாங்கத்தை ஏற்படுத்திய பிறகுதான் அவருடைய அரசியல் தீர்க்கதரிசனத்தை உணர்ந்தனர்.

அவருடைய அரசியல் ஞானம் இளமைப்பருவத்திலேயே பிரகாசிக்கத் தொடங்கியது. அலிகார் சர்வகலாசாலையில் கல்வி கற்கும் சமயத்தில், வேற்று நாட்டிலிருந்து வந்த ஒரு மாணவன் என்றாலும், 'அகில இந்திய மாணவர் சம்மேளனத்தின்' தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டமை அவருடைய ஆளுமையையும், எல்லோரையும் வசீகரிக்கக் கூடிய தன்மையையும் காட்டுகிறது. அவர் இந்திய சுதந்திரத்திற்காக பர்மா, சிங்கப்பூர், மலேயா போன்ற நாடுகளில் கூட சொற்பொழிவாற்றியிருக்கிறார். பிரித்தானிய ஏகாதிபத்தியம் கொடி கட்டிப் பறந்த காலம்; ஆங்கிலேயருக்கெதிராகப் பேசிய காந்தி, நேரு போன்றவர்களைக் கூட சிறையிலிட்ட காலம் ; அஞ்சாநெஞ்சம் கொண்ட பதியுத்தீன் 1936ம் ஆண்டு லக்னோவில் நடந்த மாணவர் சம்மேளனத்தின் மகாநாட்டுக்குத் தலைமை வகித்ததோடு, தன்னுடைய தலைமையுரையில் ஆங்கில ஏகாதிபத்தியத்திற்கு எதிராகப் பேசினார் என்றால், அவருடைய சுதந்திர உணர்வு எவ்வளவு ஆழமாக அவரிடம் பதிந்திருந்தது என்பதை நாம் ஊகிக்கலாம்.

இலங்கையின் மிதவாத அரசியல் தலைவர்களின் கொள்கையை எதிர்த்தார். பாமர மக்களின் குரலை எதிரொலிப்பதாய் அரசாங்கம் இருக்க வேண்டும் என்ற கொள்கையைக் கொண்ட பண்டாரநாயக்காவோடு அவர் சேர்ந்ததில் வியப்பில்லை. வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவத்தை அவர் எதிர்த்தார். இலங்கை அரசியலில் சனத்தொகை அடிப்படையிலே பிரதிநிதித்துவம் அமைய வேண்டும் என்ற கொள்கையைக் கொண்டிருந்தார். ஆனால் நாட்டில் பல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாகங்களிலும் சிதறிவாழும் முஸ்லிம்களுக்கு நியாயமான பிரதிநிதித்துவம் இருக்க வேண்டும் என்று கூறினார்.

1939ம் ஆண்டில் கொழும்பு சாஹிராக் கல்லூரியில் நடந்த மகாநாட்டில் "நாங்கள் ஐரோப்பியர்களைவிட எந்தவகையிலும் குறைந்தவர்களல்ல. வர்த்தகத்திலும் ஐரோப்பியர்களைவிட நாமே உயர்ந்தவர்கள். இந்த நாட்டு வரலாற்றில் நெருங்கிய தொடர்பு கொண்டவர்கள். ஆனால் இன்றைய அரசியலில் நாங்கள் பின்தள்ளப்பட்டுள்ளோம். ஒரு சமூகம் நாட்டின் முன்னேற்றத்திற்கு அதன் பங்கை நிறைவேற்ற வேண்டுமானால் அந்தச் சமூகத்திற்குரிய அரசியல் உரிமைகள் வழங்கப்படுவது அவசியமாகும்" என முழங்கினார்.

இத்தகைய புரட்சி மனப்பான்மையும், சமூக உணர்வும், அரசியல் ஞானமும் கொண்ட ஒரு புதிய பரம்பரையைத் தோற்றுவிப்பதற்கு பதியுத்தீன் ஒரு சந்தர்ப்பத்தை எதிர்ப்பார்த்துக் கொண்டிருந்தார். 1968ம் ஆண்டில் நடந்த கல்முனை இடைத்தேர்தல் இச்சந்தர்ப்பத்தை அவருக்களித்தது. முஸ்லிம் சமுதாயத்தின் உணர்ச்சிமிக்க ஓர் இளைஞர் பரம்பரையை உருவாக்குவதற்கு இடைத்தேர்தல் அவருக்கு ஒரு வாய்ப்பை அளித்தது. 'இஸ்லாமிய சோஷலிச முன்னணி' என்ற ஓர் இயக்கத்தை ஆரம்பித்தார். 1956ம் ஆண்டு மக்கள் அரசாங்கத்தினாலும், 1960ம் ஆண்டு முற்போக்கு அரசாங்கத்தினாலும் நிறுவப்பட்ட மகாவித்தியாலயங்களும், வழங்கப்பட்ட ஆசிரிய நியமனங்களும் முஸ்லிம் கல்வி வளர்ச்சிக்கு அடித்தளம் இட்டதோடு இக்கல்லூரிகளில் ஓர் உணர்ச்சிமிக்க, சமூகப்பற்றுள்ள, அரசியல் தெளிவுள்ள ஒரு புதிய பரம்பரையினர் தோன்றினர். இப்புதிய பரம்பரையினர்தான் பதியுத்தீன் மஹ்மூத் தோற்றுவித்த இஸ்லாமிய சோஷலிச முன்னணி இயக்கத்தின் போராளிகளாக மாறினர். இவ்விடைத்தேர்தலில், இஸ்லாமிய சோஷலிச முன்னணி ஆதரித்த ஒரு முஸ்லிம் வேட்பாளர் வெற்றி பெறுவதற்குக் காரணமாக நின்றனர். அத்தோடு 1970ம் ஆண்டு ஒரு முற்போக்கு அரசாங்கம் நிறுவப்பட்டதற்கு இவ்விளைஞர் பரம்பரையினர் தம் பங்கை ஆற்றினர்.

ஆயினும் காலவோட்டத்தில் முஸ்லிம்களின் அரசியல் வாழ்வில் மீண்டும் ஒரு பின்னடைவைக் காண்கிறோம். வடக்கையும், கிழக்கையும் சேர்த்து ஒரு மாகாண அரசாங்கத்தை அமைத்து, அங்குள்ள மக்களுக்கு சுயநிர்ணய உரிமை வழங்கப்படல் வேண்டும் என்ற தமிழ் மக்களின் கோரிக்கைக்கிணங்க, இந்திய அரசாங்கத்தின் உந்துதலின்பேரில் ஏற்படுத்தப்பட்ட இலங்கை- இந்திய ஒப்பந்தத்தில் முஸ்லிம்கள் புறக்கணிக்கப்பட்டனர். இந்தியப் பிரதமர் ராஜிவ் காந்திக்கு ஆலோசனை வழங்கிய புதுடில்லியில் அமைந்துள்ள தெற்கு ஆலோசனைச்சபை, முஸ்லிம்களைப் பற்றி நாம் கவலைப்படத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவையில்லை என்று கூறியது. 'மரத்திலிருந்து விழுந்தவனை மாடு முட்டியது போல' அடுத்தஅடியாக எந்தவொரு அரசியல் கட்சியும் பொதுத்தேர்தலில் 12 சத விகிதம் வாக்குகளைப் பெறாவிட்டால், அக்கட்சியின் வாக்குகள் நிராகரிக்கப்படுவதோடு அக்கட்சியும் அரசியல் கட்சியாக இயங்க முடியாது என்ற சட்டம் அரசியல் சாசனத்தில் புகுத்தப்பட்டது.

இவ்வேளையில் முஸ்லிம் சமுதாயம் முக்கியமாக இப்புதிய பரம்பரையினர் ஒரு தலைவரைத்தேடி நின்றது. இப்புதிய தலைமுறையின் தலைவராக கிழக்கிலங்கையில் அஷ்ரஃப் தோன்றினார். சூறாவளியாக எழுந்தது முஸ்லிம்களின் எழுச்சி. அவ்வெழுச்சி 'முஸ்லிம் காங்கிரஸ்' என்ற பெயரைச் சூட்டிக் கொண்டது. 17 வருட ஆட்சியொன்றை முடிவுக்குக்கொண்டு வருவதற்கும், இந்த தலைமுறையினரின் தலைவியாக பண்டார நாயக்காவின் புதல்வி சந்திரிகாவின் தலைமைத்துவத்தைக் கொண்ட ஒரு புதிய அரசாங்கம் நிறுவப்படுவதற்கும் முஸ்லிம் காங்கிரஸின் பங்கு அளப்பரியது. பதியுத்தீன் மஹ்மூத்தின் தலைமையில் அன்று விதைத்த விதையின் விளைச்சலான புதிய பரம்பரையினர்தான் இம்முஸ்லிம் காங்கிரஸின் ஆணிவேராக அமைந்தனர். பதியுத்தீன் விட்டுச் சென்ற பணியை புதிய பாணியில் அஷ்ரஃப் தொடர்வதற்குக் காரணம் முஸ்லிம் இளைஞர்களிடையே தோன்றிய இவ்வேட்கையே என்றால் அது மிகையாகாது.

பதியுத்தீன் மஹ்மூத் கல்வி அமைச்சராக இருந்து ஆற்றியசேவை முஸ்லிம் மக்களுக்கு மாத்திரமல்ல, இந்நாட்டு மக்கள் எல்லோருக்கும் பயன்பட்டது. தனியார் நிறுவனங்களினதும் மிஷனரிமார்களினதும் ஆதிக்கத்திலிருந்த கல்வி, மக்கள் பொதுச் சொத்தாக மாறியதற்கு பதியுத்தீன் மஹ்மூத் அவர்களால் அமுலுக்கு கொண்டுவரப்பட்ட தனியார் பாடசாலைகள் அரசாங்க மயமாக்கப் படல் என்ற சட்டமே காரணம். இதனால் உதவி நன்கொடைப் பாடசாலைகளுக்கும், அரசாங்கப் பாடசாலைகளுக்கு மிடையே இருந்த ஏற்றத்தாழ்வு அகற்றப்பட்டது. எல்லோருக்கும் சமவாய்ப் பினை இச்சட்டம் அமைத்தது. ஏழ்மையில் வருந்திக் கிடந்த கிராம மக்களின் குழந்தைகளுக்கும் தரமான கல்வி கிடைக்கும் வாய்ப்புக் கிடைத்தது. புதிய கட்டடங்களும், தளபாடங்களும், விஞ்ஞான, தொழிற்கல்வி, வர்த்தகக் கல்விக்கூடங்களும் அமைக்கப்பட்டதோடு, திறமையுள்ள அதிபர்களும் சிறந்த ஆசிரியர்களும் கிராமப்புற பாடசாலைகளுக்கு அனுப்பப்பட்டனர். கிராமப்புற மாணவர்கள் சர்வகலாசாலையில் சேர்ந்து கல்வி கற்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமப்புற ஏழைமாணவர்களுக்கு வரப்பிரசாதமாக அமைந்ததுதான் பதியுத்தீன் மஹ்மூத் அமுலுக்குக் கொண்டு வந்த தரப்படுத்தல், மாவட்டக்கோட்டா என்பனவாகும். இதனால் மிகவும் வசதிகள் கொண்ட நகரப் பாடசாலைகளில் கல்விகற்கும் மாணவர்கள் ஓரளவு பாதிக்கப்பட்டார்க ளென்றாலும், கிராமப்புற மாணவர்கள் இதனால் பெரிதும் பயனடைந்தார்கள். இம்மாணவர்களின் கல்விப் பசியைத் தீர்ப்பதற்கு புதிய சர்வகலாசாலைகள் தோற்றுவிக்கப் பட்டன. அதிகமான கிராமப்புற மாணவர்கள் வைத்தியர் களாகவும், பொறியியலாளர்களாகவும், அரசாங்கஉத்தியோகத்தர்களாகவும் கடமையாற்றத் தொடங்கினார்கள். இலங்கைச் சமுதாயம் உலகிலேயே கல்வியறிவு பெற்ற ஒரு விறுவிறுப்புள்ள சமுதாயமாகக் கணிக்கப்பட்டது. சர்வதேச அரங்குகளிலும், சர்வகலாசாலைகளிலும், உலக ஸ்தாபனங்களிலும் இலங்கை அறிஞர்களின் செல்வாக்குப் பரவியது. இவையெல்லாவற்றிற்கும் காரணம் பதியுத்தீன் கல்வி அமைச்சராக இருந்து நாட்டிற்கு ஆற்றிய சேவை என்றால் அது மிகையாகாது.

காலஞ்சென்ற பதியுத்தீன் அவர்களுடன் நெருங்கிப் பழகியவர்களில் நானும் ஒருவன். 1960 ம் ஆண்டு தொடக்கம் கல்வி இலாகாவில் அவருடைய நேரடி மேற்பார்வையில் கடமையாற்றிய உத்தியோகஸ்தன் என்ற முறையில் அவருடைய எண்ணங்களையும் அபிலாசைகளையும் கொள்கைகளையும் அறிந்தவன். இஸ்லாமிய சாம்ராஜ்யத்தின் மகோன்னதத்தைப் பற்றியும், இன்று தாழ்ந்த நிலையிலுள்ள உலக முஸ்லிம் சமுதாயம் எழுச்சி பெற்று திரும்பவும் தன்னுடைய மகத்துவத்தை உலகம் பூராவும் பிரகாசிக்கச் செய்யும் காலத்தைப் பற்றியும் கனவு கண்டார். எதிர்காலத்தில் எழுச்சி பெற்று வரும் முஸ்லிம் சமுதாயத்தின் ஓர் அங்கமாக இலங்கை முஸ்லிம்கள் வளரவேண்டும் என்றும் ஆசைப்பட்டார்.

அவருடைய இவ்வெண்ணங்களினால் உந்தப்பட்ட நான், அவருடன் சேர்ந்து முஸ்லிம் சமூகத்தின் கல்வி வளர்ச்சிக்காகப் பாடுபட்டேன். அவருடைய எண்ணங்களின் தாற்பரியத்தை உணர்ந்து செயல்பட்ட நான், செல்வாக்குள்ள பலரின் பயமுறுத்தல்களுக்கு ஆளாக்கப்பட்டேன். அப்பொழுது அவர் என்னை அழைத்து 'வாழ்ந்தால் சிங்கம் போல் வாழ வேண்டும். சாவது ஒரு முறைதான். பயமின்றி உன்னுடைய கடமையைச் செய்' என்று கூறி அனுப்பினார். என்னுடைய உயிருக்கு ஆபத்து நேரவிருந்த சமயங்களில், அவர் எடுத்த சில மறைமுக நடவடிக்கைகள் மூலம் இறைவன் என்னைக் காப்பாற்றினான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னுடைய ஆசான் ஏ. எம். ஏ. அஸீஸ் என்னை சமூக உணர்வுள்ளவனாக ஆக்கினார். அந்த உணர்வை அதிவேகமானதாக மாற்றினார் பதியுத்தீன். என்னுடைய வாழ்க்கையின் உயர்வுக்கு இவ்விருவருமே காரணம்.

ஜனாப். எஸ். எச். எம். ஜெமீல் என்னுடைய மாணவன். கொழும்பு சாஹிராவில் நான் ஆசிரியராக இருந்தபோது என்னிடம் வரலாறு கற்றவர். ஏ. எம். ஏ. அஸீஸும் பதியுத்தீனும் தோற்றுவித்த புதிய பரம்பரையினரைச் சேர்ந்தவர். அவர் சர்வகலாசாலையில் முதுமாணிப்பட்டம் பெற்றவர். வரலாற்றுத் துறையில் ஆழ்ந்த அறிவு பெற்றவர். கல்வி இலாகாவின் ஓர் அங்கமாகிய பரீட்சைத் திணைக்களத்தில் உதவி அத்தியட்சகராகவிருந்து, கல்முனை சாஹிராவின் அதிபராகக் கடமையாற்றிவிட்டு, அட்டாளைச்சேனை ஆசிரிய பயிற்சிக் கல்லூரியின் அதிபராகக் கடமையாற்றி, அதனைத் தொடர்ந்து கிழக்குப் பல்கலைக்கழகத்தின் முதல் பதிவாளராகி, முஸ்லிம் சமய, கலாசார அலுவல்கள் ராஜாங்க அமைச்சின் செயலாள ராக உயர்வுபெற்று, கலாசார, சமய அலுவல்கள் அமைச்சின் மேலதிக செயலாளராகி, இன்று அவ்வமைச்சின் ஆலோசகராகப் பணியாற்றி வருகிறார்.


அவருடைய சமூகப்பணி அளப்பரியது. முஸ்லிம்கள் செறிந்து வாழும் பிரதேசங்களின் பிரதேச வரலாற்று ஆய்வுகளில் அவரது பங்களிப்பு முக்கியமானது. களுத்துறை, மாத்தளை, கண்டி, மாத்தறை, அநுராதபுரம், அம்பாறை ஆகிய மாவட்டங்களில் வாழும் முஸ்லிம்களின் வரலாறுகள் இவ்வமைச்சின் ஆக்கங்கள். இவருடைய இன்னும் ஒரு பெரிய சேவை என்னவென்றால் ஆய்வாளருக்குத் தேவையான 1482 மூல நூல்களைப் பற்றிய விபரங்களைத் திரட்டி 'சுவடி ஆற்றுப்படை' என்ற பெயரில் வெளியிட்டமையாகும். இவர் இலக்கியத்திலும் தன்னுடைய திறமையைக் காட்டியிருக்கிறார். நாட்டுப் பாடல்களைப் பற்றிய 'கிராமத்து இதயம்' என்ற இவரது நூல் சாகித்தியப் பரிசு பெற்றது. பதியுத்தீனைப் பற்றிய இந்நூல் எல்லோராலும் வரவேற்கப்படும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

*ஏ. எம். சமீம்*

*10 செப்டெம்பர் 1997*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாநிதி பதியுத்தீன் மஹ்மூதின் கல்விப் பணிகள்

இலங்கையில் சமுதாயப் புரட்சியொன்றேற்பட்டு, பொதுமக்கள் யுகமொன்று மலர்ந்த ஆண்டாக 1956 கொள்ளப்படுகின்றது. முஸ்லிம்களின் கல்வித்துறையிலும் இதன் தாக்கத்தைக் காணலாம். அவ்வாண்டிலும் அதற்குப் பின்னரும் முஸ்லிம்களிடையே ஏற்பட்ட கல்வி விழிப்புக்கும் அதன் மூலமான சமுதாய மாற்றத்திற்கும் கலாநிதி அல்ஹாஜ் பதியுத்தீன் மஹ்மூதும் முக்கிய காரணமாக அமைகிறார்.

பதியுத்தீன், 1904 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 23 ஆம் திகதி வியாழக்கிழமை மாத்தறையில் பிறந்தார். தந்தை : எஸ். எல். எம். மஹ்மூத் நெய்னா மரிக்கார் மத்திச்சம்; தாயார் : செய்யது முஸ்தபா நொத்தாரிஸ் ஹாஜியாரின் மகள் பாத்தும்மா நாச்சியார். பன்னிரண்டு பிள்ளைகளுள்ள குடும்பத்தில் பதியுத்தீன் கடைசிப் பிள்ளையாவார். மாத்தறையை அண்மித்தாயுள்ள வெலிகமையில் இளம்பராயத்தைக் கழித்த இவர் தனது ஆரம்பக் கல்வியை அங்கும், பின்னர் மாத்தறையிலும், கொழும்பு ஸாஹிராக் கல்லூரியிலும் பெற்றார். கொழும்பு ஸாஹிராவில் கற்கும் காலத்தில் மாணவர் தலைவராகவும் (Senior Prefect) கடமையாற்றினார்.

## முஸ்லிம் வாலிப லீக் புத்துணர்வு

கல்வி, சமூக, அரசியல் துறைகளில் மிக இளம் வயதிலேயே பதியுத்தீன் மஹ்மூத் ஈடுபட ஆரம்பித்துள்ளார். இதற்கான தளமாக முஸ்லிம் வாலிப லீக் அவருக்குப் பயன்பட்டது. முஸ்லிம் வாலிப லீக் மூலம் அவர் சேவையாற்ற ஆரம்பித்தது மட்டுமல்லாது, சோர்வுற்றுக்கிடந்த அவ்வியக்கமும் அவரது உத்வேகத்தினால் உற்சாகமடையத் தொடங்கியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1927 இல் பதியுத்தீன் முஸ்லிம் வாலிப லீக் செயலாளரானார். சுமார் நான்காண்டுகள் அப்பதவியை வகித்த காலத்தில் பல முக்கிய மாற்றங்களை அவ்வியக்கத்தில் ஏற்படுத்தினார்.

முதலாவது, சமுதாயப் பொதுப் பிரச்சினைகள் தோன்றும் பொழுது, அன்றைய முஸ்லிம் தலைவர்கள் ஒன்றுகூடிக் கலந்து ரையாடித் தீர்வுகாணும் இடமாக முஸ்லிம் லீக்கை மாற்றினார்.

இரண்டாவதாக, இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப தசாப்தங்களில் நாட்டு மக்கள் இரு வர்க்கங்களாகப் பிரிந்திருந்தது போன்று, முஸ்லிம்களும் இரு வர்க்கங்களாயிருந்தனர். ஓரளவு ஆங்கிலம் கற்ற, வர்த்தகத்திற் பணம் ஈட்டிய, ஆங்கிலேயரோடு ஒத்துழைக்கும் வர்க்கத்தினர் மேல் மட்டத்தினராயிருந்தனர். சமுதாய சாதனங்கள் யாவும் இவர்களது கட்டுப்பாட்டிலேயேயிருந்தன. ஏனைய சாதாரண மக்கள் எவ்விதப் பலனும் அனுபவிக்கவில்லை. முஸ்லிம் வாலிப லீக்கும் மேல் மட்டத்தினரின் கட்டுப்பாட்டி லேயிருந்தது. இந்நிலை மாற வேண்டுமென பதியுத்தீன் விழைந்தார். அதனாலேயே "படித்த காற்சட்டைக் காரர்கள் மட்டுமன்றிச் சாரம் உடுத்திய சாதாரண மக்களுக்கும் லீக்கின் உயர் பதவிகள் வழங்கப்படல் வேண்டும்"[1] என வாதிட்டார்.

மூன்றாவதாக, அக்காலகட்டத்தில் கொழும்பை வசிப்பிடமாகக் கொண்ட 'மேல் மட்ட முஸ்லிம்கள்' மட்டுமே முஸ்லிம் வாலிப லீக்கைத் தமது கட்டுப்பாட்டினுள் வைத்திருந்தனர். அவ்வாறின்றி நாடு முழுவதும் பரந்த இயக்கமாக அது மாற வேண்டுமெனத் திடசங்கற்பம் பூண்டு, கிளைகள் அமைப்பதிலும் அவர் தீவிரமாகச் செயற்பட்டார்.

இவ்வியக்கத்தின் நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துவதற்காக நிரந்தர காரியாலயம் ஒன்று கொழும்பு, பிரதான வீதி, முதலாம் இலக்க உம்பிச்சிக் கட்டிடத்தில் நிறுவப்பட்டது. அங்கு கடமையாற்ற ஓர் அதிகாரியும், இலிகிதரும், தட்டெழுத்தாளரும் நியமிக்கப்பட்டதோடு டெலிபோன் வசதிகளும் செய்யப்பட்டன. கொள்கை விளக்க நூல் ஒன்று வெளியிடப்பட்டதோடு, "சரன்தீப்" என்னும் சஞ்சிகையும் பிரசுரிக்கப்பட்டது.

இவ்வாலிப முஸ்லிம் லீக்கே காலக்கிரமத்தில் அகில இலங்கை முஸ்லிம் லீக் என வளர்ச்சி பெற்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அலிகாரில் உயர்கல்வி

இதே தீவிரத்தை அவர் அலிகார் பல்கலைக்கழக மாணவராயிருக்கும் பொழுதும் காணக்கூடியதாகவிருந்தது. இந்நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் இந்நாட்டு மக்களின் ஆதர்ச கல்விப் பீடங்களாக பிரித்தானியாவிலுள்ள ஒக்ஸ்போர்ட்டும், கேம்பிரிஜ்ஜுமேயிருந்தன. அங்கு கற்றுத் திரும்புவதே சமுதாய அந்தஸ்தை வழங்கியது. அவ்வாறிருந்தும் வட இந்தியாவிலுள்ள அலிகார் பல்கலைக்கழகத்திலேயே தமது உயர்கல்வியைப் பெற பதியுத்தீன் விரும்பி அவ்வாறே செய்தார். அவ்வாறு அங்கு சென்ற முதல் இலங்கை மாணவன் எனும் பெருமை அவருக்குண்டு. அலிகார் பாடசாலையில் இவருக்கு முன் சில இலங்கை மாணவர் கற்றாலும் அவர்கள் பல்கலைக்கழகக் கல்வியைத் தொடராது திரும்பினர். அலிகார் செல்வதற்கான தூண்டுதலை வழங்கியவர் அப்போது கொழும்பு ஸாஹிராவிற் கடமையாற்றிய றவூப்பாஷா ஆவார்.

அங்கு கல்வி கற்ற காலத்திலும் பல தேசிய எழுச்சி இயக்கங்களிற் தீவிர பங்கெடுத்தார். மாணவர் பேரவைத் தலைவராகவும் இருந்தார். இக்கால கட்டத்திலேயே பர்மா, மலேயா, சிங்கப்பூர், ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளிற் பரந்த சுற்றுலாக்களை மேற்கொண்டதோடு, ஆங்காங்கே பல சொற்பொழிவு களையும் நிகழ்த்தினார். சுதந்திர இயக்கங்களைப் பலமாக ஆதரிப்பதாகவும், பிரித்தானிய ஏகாதிபத்தியத்தை எதிர்ப்பதாகவுமே இவரது சொற்பொழிவுகள் அமைந்தன. இதன் காரணமாக பர்மா, மலேயா ஆகிய நாடுகளிலிருந்து இவர் உடனடியாக வெளியேற்றப்பட்ட சம்பவங்களும் உண்டு.

## ரங்கூன் பத்திரிகையில் பேட்டி

1933 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 10 ஆம் திகதிய ரங்கூன் டெய்லிநியூஸ் பத்திரிகையில் வெளியான பேட்டியொன்றில் பதியுத்தீன் பின்வருமாறு கூறுகிறார் :

" நான் ஒரு வகுப்புவாதியல்ல, வகுப்புவாதியாக இருக்கப் போவதுமில்லை. எனது நாடு அப்படியானதொன்றை அங்கீகரிக்கவும் மாட்டாது. எனது நாட்டின் எதிர்கால நன்மையைக் கருத்திற் கொண்டு ஒற்றுமை, சகோதரத்துவம், சமத்துவம் என்ற உயரிய நோக்கங்களைத் தைரியமாக மேற்கொண்ட ஓர் இளைஞனாகவே என்னை நான் மாற்றிக் கொள்ள முயற்சிக்கிறேன். இலங்கை அரசியல் சாசனத்திலும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதி அடிப்படையில் அல்லாமல் சனத்தொகை அடிப்படையிலேயே பிரதிநிதித்துவம் அளிக்கப்பட வேண்டுமென்று இலங்கை முஸ்லிம் லீக் குரலெழுப்பிக் கொண்டிருக்கிறது.

முஸ்லிம்கள் எப்பொழுதுமே சாதித்துவேசமற்றவர்கள். பிளவுகளை ஏற்படுத்த விரும்புகிறவர்களல்ல. வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் ஒழிக்கப் பட்டபோது முஸ்லிம்கள் அதனை வரவேற்றனர். எனினும் வியாபார சமூகத்தினரான முஸ்லிகளுக்குச் சில தனிப்பட்ட விசேடமான அபிலாஷைகள் இருப்பதால் நியாயமான அளவுக்கு எமக்கும் பிரதிநிதித்துவம் இருக்க வேண்டுமென்பதே முஸ்லிம் லீக்கின் தற்போதைய முக்கியமான கோரிக்கையாக இருந்து வருகிறது." [2]

அலிகாரிற் கல்வி கற்ற காலத்தில் அகில இந்திய மாணவர் சம்மேளனத்தில் அலிகாரின் பிரதிநிதியாகவிருந்தார். இச்சம்மேளனம் இந்தியாவின் எல்லாப் பல்கலைக்கழகங்களையும் உள்ளடக்கியது. 1936 இல் லக்னோவில் இச்சம்மேளனத்தினால் நடத்தப்பட்ட மகாநாட்டுக்கு பதியுத்தீன் தலைமை தாங்கினார். ஜவஹர்லால்நேரு, முஹம்மதலி ஜின்னா ஆகிய இருவரும் இம்மகாநாட்டிற் கலந்து சிறப்பித்தனர்.

அலிகார் பல்கலைக்கழகச் சஞ்சிகையின் ஆசிரியராகவும் பதியுத்தீன் பணி புரிந்தார். பிற்காலத்தில் சர்வதேசப் புகழ்பெற்ற அறிஞரான டாக்டர் பஸ்லுர் ரஹ்மான் அன்ஸாரி இச்சஞ்சிகையின் துணைஆசிரியராகக் கடமையாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது.

## கல்விப் பணி

எம். ஏ. பட்டதாரியாக நாடு திரும்பிய பின்னர், தமது சமுதாய, கல்விப் பணிகளை அவர் மேலும் விரிவாக்கிக் கொண்டார். 1939 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 5 ஆம் திகதி அகில இலங்கை முஸ்லிம் அரசியல் மாநாடொன்றைக் கொழும்பு ஸாஹிராக் கல்லூரியிற் கூட்டினார். அக்கூட்டத்தில் அவர் பின்வருமாறு பேசினார் :

"இத்தீவில் முஸ்லிம்கள் மாத்திரமே மற்றெல்லா இனங்களை விடவும் மிகத் தாழ்வான முறையிற் கணிக்கப்பட்டுள்ளனர். கவர்னர்களின் அறிக்கைகளில் முஸ்லிம்களைப் பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை. ஏகாதிபத்தியவாதிகளால் நன்கு கவனிக்கப் பட்டு வரும் ஐரோப்பிய இனத்தவர்கள் தேவைக்கும் அதிகமான அளவு உரிமைகளையும், சலுகைகளையும் அனுபவிக்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முஸ்லிம்களிலும் பத்திலொரு பங்காக வாழ்கின்ற பிறங்கிய மக்களுக்குத் தேவைக்கும் அதிகமான பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டுள்ளது. அங்குமிங்குமாக வாழுகின்ற இந்தியர்கள் எம்மை விடவும் வசதிகளோடு வாழ்கின்றனர்.

நாங்கள் ஐரோப்பியர்களை விட எந்தவகையிலும் குறைந்தவர்கள் அல்ல. வர்த்தகத்திலும் ஐரோப்பியர்களைவிட நாமே உயர்ந்தவர்கள். இந்த நாட்டு வரலாற்றிலும் நெருங்கிய தொடர்பு கொண்டவர்கள். ஆனால் இன்றைய அரசியலில் நாங்கள் பின்தள்ளப்பட்டுள்ளோம். ஒரு சமூகம் நாட்டின் முன்னேற்றத்திற்கு அதன் பங்கை நிறைவேற்ற வேண்டுமானால் அந்தச் சமூகத்துக் குரிய அரசியல் உரிமைகள் வழங்கப்படுவது அவசியமாகும்.

ஒரு தனிப்பட்டவர் பெருமையுடையவராகவோ, திறமைசாலியாகவோ, தேசாபிமானமுடையவராகவோ இருக்கலாம். ஆனால் அவர் வாழும் சமூகத்திற்குத் தரப்பட வேண்டிய உரிமைகள் மறுக்கப்பட்டால், அந்தச் சமூகத்தில் வாழும் ஒருவர் எத்தகைய திறமைசாலியாக இருந்த பொழுதிலும் அவர் அதனால் திருப்தி காண முடியாது. அரசாங்க சபையில் போதிய பிரதிநிதித்துவம் இல்லாத ஒரு சமூகம், ஏனைய துறைகளில் எவ்வளவு செல்வாக்குப் பெற்றிருந்த போதிலும் நாட்டின் ஏனைய மக்களோடு ஒன்றிணைந்த சமூகமாக வாழ முடியாது. இந்த நாட்டு வருமானத்துக்கு எமது சமூகம் அளித்துள்ள பங்கானது, மற்றவர்களுடன் ஒப்பிடுகையில் எந்தவிதத்திலும் குறைவானதல்ல. எமது முன்னோர் உலகச் சந்தையில் இலங்கையின் பெயரை அறிமுகப்படுத்தியதனால் இந்நாடு உலக அரங்கில் முக்கியத்துவம் பெற்று விட்டது. மற்றவர்களைப் போலன்றி நாம் இந்நாட்டிற்குச் சமாதான முறையில் வர்த்தகர்களாகவே வந்தோம். ஏனைய சமூகங்களைவிட நாம் இந்நாட்டுக்கு நட்பும், பணிவும் காட்டி சட்டத்திற்கு மதிப்பளித்து வந்துள்ளோம்.

நபிகள் பெருமானார் (ஸல்) அவர்களின் காலத்திற்கு முன்னர் எமது அராபிய முன்னோடிகள் இலங்கையுடன் வியாபாரத் தொடர்பு கொண்டிருந்தனர். அதனால் இந்நாட்டுடனான எமது வரலாற்றுத் தொடர்பு சிங்கள மக்களைப் போன்றே மிகத் தொன்மையானதாகும். சிங்கள மக்களுடன் நாம் தோளோடு தோள் சேர்ந்து இந்நாட்டின் மூலைமுடுக்குகளிலெல்லாம் தேசியப்பற்றுடனும், ஒற்றுமை மனப்பான்மையுடனும் வாழ்ந்து வந்துள்ளோம். நம் முன்னோர் அளித்துள்ள அரும்பெரும் கலாசாரப் பெருமைகளை நாம் எப்பொழுதும் காப்பாற்றியாக வேண்டும். உலக ஜனநாயக அடிப்படையிலேதான் உலக ஜனநாயகமும் சகோதரத்துவமும் உருவாகியுள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது கலாசார, மத நம்பிக்கைகளினால் நாம் இந்நாட்டில் முக்கியமான ஓர் இடத்தைப் பெற்றுள்ளோம். அதனால் நாட்டின் அரசியலிலும் நாம் முக்கியத்துவம் பெறுவது அவசியமாகும். அதற்காக விசேட கவனிப்பும் மேலதிகப் பிரதிநிதித்துவமும் நாட்டின் அரசியல் அமைப்பில் எமக்குக் கிடைத்தேயாக வேண்டும். அப்பொழுதுதான் நாட்டின் எதிர்கால முன்னேற் றத்தில் எமது பங்கை உரிய முறையில் நிறைவேற்றி வைக்க முடியும். இதுவே எமது நம்பிக்கையும், உணர்வும் ஆகும்." [3]

## கம்பளை ஸாஹிரா

கல்வித்துறையிலும், சமூகத்துறையிலும் பதியுத்தீன் கொண்டிருந்த இவ்விலட்சியங்களை நிறைவேற்றுவதற்கான சந்தர்ப்பங்கள் இரு வழிகளில் அவருக்குக் கிடைத்தன. ஒன்று : கம்பளை ஸாஹிராக் கல்லூரி அதிபராகக் கடமையாற்றியமை; இரண்டு : அரசியலில் ஈடுபட்டு சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஸ்தாபகர்களுள் ஒருவராகவும், சுமார் பத்து வருடங்கள் கல்வி அமைச்சராகவும் கடமையாற்றியமையுமாகும்.

இரண்டாவது உலக யுத்தம் ஆரம்பித்த பொழுது, கொழும்பில் வாழ்ந்த மக்கள் கிராமப்புறங்களுக்குக் குடிபெயர வேண்டி ஏற்பட்டது. கொழும்பு ஸாஹிராக் கல்லூரியில் கற்றுக் கொண்டிருந்த வெளியூர் மாணவர்களும் தத்தமது பிரதேசங்களுக்குச் செல்ல வேண்டியேற்பட்டது. இதைச் சாதகமாகப் பயன்படுத்தி அல்ஹாஜ் ரி. பி. ஜாயா, மாகாணங்களிலும் கொழும்பு ஸாஹிராவின் கிளைகளை ஆரம்பித்தார். அவ்வாறானதொரு கிளை கம்பளையில் 1942 மே 15ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. கம்பளை நகர ஜும்ஆப் பள்ளிவாசல் வழங்கிய ஏழு ஏக்கர் நிலப்பரப்பில் ஸாஹிராக் கல்லூரி இயங்கத் தொடங்கியது. இதனை ஆரம்பிப்பதில் எம். எஸ். செய்யத் முஹம்மத்; ஒமர் பாச்சா ஆகியோர் பெரிதும் துணையாயிருந்தனர். கொழும்பு ஸாஹிராவே பிரதானமானதும், ஏனையவை அதன் கிளைகளே எனும் கொள்கைக்கேற்ப ரி. பி. ஜாயாவே இதன் அதிபராகவும், பேராசிரியர் செய்யித் ரவூப் பாஷா உதவி அதிபராகவும் கடமையாற்றினர்.

இதனைத் தொடர்ந்து தனதும், கொழும்பு ஸாஹிராவினதும் புகழ்மிக்க மாணவனான பதியுத்தீனை தேர்ந்தெடுத்து 1944 இல் கம்பளை ஸாஹிராவிற்குப் பொறுப்பாக ஜாயா அனுப்பி வைத்தார். 1945 இல் கொழும்பு ஸாஹிராவின் கட்டுப்பாட்டிலிருந்து விடுபட்டு, மாகாண ஸாஹிராக்கள் அனைத்தும் பூரண சுதந்திர நிறுவனங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பிரதமர் எஸ். டபிள்யு. ஆர்.டி. பண்டாரநாயக்கா 1958 ஆம் ஆண்டு கம்பளை ஸாஹிராக் கல்லூரிக்கு விஜயம் செய்தபோது, அதிபர் பதியுத்தீன் மஹ்மூதினால் வரவேற்று அழைத்துச் செல்லப்படுகிறார். இன்றையப் பிரதமர் மாண்புமிகு ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அம்மையாரும் அருகே செல்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1972 செப்டெம்பர் 30 ஆம் திகதி பிரதமர் மாண்புமிகு சிறிமாவோ பண்டாரநாயக்கா அம்மையாருக்கு இலங்கை முஸ்லிம்களினால் பதியுத்தீன் மஹ்மூத் தலைமையில் கொழும்பு மருதானைப் பள்ளிவாசல் மைதானத்தில் மகத்தான வரவேற்பளிக்கப்பட்டது. அவ்விழாவில் பிரதமர் உரையாற்று கின்றார். டாக்டர் எம். ஸி. எம். கலீல், ஸேர் ராஸிக் பரீத், அல்ஹாஜ் எம். ஐ. எம். நளீம், அமைச்சர்கள் கலாநிதி கொல்வின் ஆர். டீ. சில்வா, பீட்டர் கெனமன், பதிவாளர் நாயகம் எச். எம். இசட். பாரூக், பேர்னார்ட் சொய்ஸா எம். பி. ஆகியோரும் மேடையில் அமர்ந்திருக்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களாகஇயங்கத் தொடங்கியதும், கம்பளை ஸாஹிராக் கல்லூரியின் முதலாவது அதிபராக பதியுத்தீன் பதவி வகிக்க ஆரம்பித்து, நீண்ட காலம் 1960 வரை அங்கு சேவையாற்றினார். அத்துடன் கல்லூரிக்கு மிக அருகிலேயே தனது வாசஸ்தலத்தையும் கட்டினார். பொருளியல் ரீதியாக பதியுத்தீன் தன் வாழ்நாளில் தேடிய ஒரேயொரு சொத்து இவ்வீடேயாகும். அதனையும் பிற்காலத்தில் விற்றுவிட்டார். தனக்கென வாழாது, தனது நாட்டுக்கும் சமுதாயத்துக்கும் முழு வாழ்வையும் அர்ப்பணிப்பவர்களுக்கு இவரொரு சிறந்த உதாரணமாகும்.

கம்பளை ஸாஹிராவைப் பொறுப்பேற்ற நாளிலிருந்து முஸ்லிம் கல்வி வளர்ச்சியில் நேரடியான பங்களிப்புச் செய்யக்கூடிய வாய்ப்பு அவருக்குக் கிடைத்தது. கல்லூரி எல்லாத் துறைகளிலும் பெருமுன்னேற்றம் கண்டது.

இன்று இலங்கை எங்கணும் முஸ்லிம் மாணவிகளினால் அணியப்படும் பஞ்சாபிய உடையை இந்நாட்டில் முதன்முதல் அறிமுகம் செய்தவர் பதியுத்தீனேயாவார். கம்பளை ஸாஹிராக் கல்லூரியின் அதிபராய் இருந்த காலத்தில் தனது கல்லூரி மாணவிகள் அவ்வுடையை அணியும் பழக்கத்தினை ஏற்படுத்தினார். ஆரம்பத்தில் அதனைப் பலர் எதிர்த்தனர். ஆனால் காலக்கிரமத்தில் சிறப்பான, ஒழுங்கான ஓர் உடையாக இது ஏற்றுக்கொள்ளப் பட்டு இன்று நாடு முழுவதிலும் பொதுவான ஓர் உடையாகக் கைக்கொள்ளப் படுகிறது.

கல்வி அமைச்சராய்ப் பதவியேற்ற பின்னரும்கூட கம்பளை ஸாஹிராக் கல்லூரி மீதான அவரது கரிசனையை மிக வலுவாக வைத்திருந்தார்.

"அவர் கம்பளை ஸாஹிராக் கல்லூரியை மிகவும் நேசித்தார். இதனால் இங்கு கல்வி கற்பித்த ஆசிரியர்களுக்குள்ள குறைகளை நீக்கிவைப்பதிலும் இவர் கவனஞ் செலுத்தினார். அலிகார் பல்கலைக்கழகப் பாணியில் இதனை அமைத்துக் கொடுப்பதில் இவருக்குத் தனி ஆர்வம் இருந்தது. இதில் அவர் வெற்றி பெற்றார். அரபு நாடுகளும் இக்கல்லூரியின் வளர்ச்சிக்கு உதவின. இங்கு ஒரு கலாசார நிலையம் உருவாக்கப்பட்டது. சிறந்த ஒரு நூலகமும் ஏற்படுத்தப் பட்டது. பல முஸ்லிம் நாடுகளும் நூல்களை அன்பளிப்புச் செய்திருந்தன." [4]

இக்கல்லூரியிற் கடமையாற்றிய காலத்திலேயே, 1950 செப்டெம்பரில் புனித மக்கா சென்று தனது ஹஜ்ஜுக் கடமையை நிறைவேற்றினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்வி அமைச்சர்

அரசியலில் ஈடுபட்டுக் கல்வி அமைச்சராகப் பதவி வகித்த காலத்திலேயே நாடளாவிய ரீதியில் முஸ்லிம்களின் கல்வித்துறையை முன்னேற்றக்கூடிய வாய்ப்பு இவருக்குக் கிடைத்தது. கல்வித்துறையிலும், ஏனைய துறைகளிலும் அவர்கள் பின்னடைந்திருப்பதை பதியுத்தீன் பின்வருமாறு கூறுகிறார் :

"கல்வித்துறை சம்பந்தமாக மற்றவர்கள் தீர்க்கமான முறையில் சிந்திக்கும்போது நாம் அதுபற்றி எவ்வளவு தூரம் சிந்திக்கிறோம் ? முஸ்லிம் பள்ளிக்கூடங்களில் விஞ்ஞான, தொழில்நுட்பக் கல்வி சம்பந்தமாக எந்தளவுக்கு வலியுறுத்தப்பட்டுள்ளது ? பெருவாரியாக முஸ்லிம்கள் வாழும் பகுதிகளில் உள்ள மக்களின் நன்மைக்கான தொழில்நுட்பப் பாடசாலைகள் அமைக்கப் படுகின்றனவா ?" [5]

இத்தகைய சிந்தனை நீண்டகாலமாகவே பதியுத்தீனுக்கு இருந்து வந்தது. இவற்றை உள்ளடக்கியதாகவே பத்தாண்டுத் திட்டமொன்றை 1957 இல் வெளியிட்டார். முஸ்லிம் சமூகத்தின் கல்வி, சமூக, சன்மார்க்க, கலாசார முன்னேற்றத்திற்கான வழிகளை இத்திட்டம் வெளியிட்டது. 1956 இல் எஸ். டபிள்யூ. ஆர். டீ. பண்டாரநாயக்கா தலைமையில் மக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கம் அமைக்கப்பட்டபோது அதன் மூலம் முஸ்லிம்களின் கல்வியை முன்னேற்ற பதியுத்தீன் முற்பட்டார். மக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் மிக முக்கிய பிரிவான சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஸ்தாபக செயலாளர்களுள் ஒருவர் பதியுத்தீன் ஆவார். அதனால் அரசாங்கத்தில் மிகச் செல்வாக்குடை யவராக இருந்தார். முஸ்லிம்களின் கல்வி முன்னேற்றத்திற்கான இருபத்தியாறு கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றை அப்போதைய கல்வி அமைச்சர் டபிள்யூ. தஹநாயக்காவிடம் சமர்ப்பித்தார். அவற்றுள் சில வருமாறு :

1. ஐம்பது வீதத்திற்கு அதிகமான முஸ்லிம்கள் கல்வி பயிலும் பாடசாலைகளை முஸ்லிம் பாடசாலைகளென அழைத்தல்
2. முஸ்லிம் பாடசாலைகளுக்கு முஸ்லிம்களையே தலைமையாசிரியர்களாய் நியமித்தல்
3. முஸ்லிம் அதிகாரி ஒருவரின் பராமரிப்பில் முஸ்லிம் பாடசாலைகளுக்கான தனிப்பிரிவு ஒன்றை உருவாக்கல்
4. முஸ்லிம் வித்தியாதரிசிகளின் தொகையை அதிகரித்தல்
5. கூடுதலான முஸ்லிம்களை ஆசிரிய பயிற்சிக்குத் தெரிவு செய்தல்
6. முஸ்லிம் ஆசிரியைகள் நியமனத்தில் விசேட சலுகை வழங்கல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1972 செப்டெம்பர் 30 ஆந் திகதி நடைபெற்ற விழாவில் தகவல், ஒலிபரப்புத்துறை பிரதி அமைச்சரும் மூதூர் முதல்வருமான ஏ. எல். ஏ. மஜீத் உரையாற்றுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




1987 இல் பதியுத்தீன் மஹ்மூத் கிழக்கு மாகாணத்தில் சுற்றுப்பயணம் செய்தார். அவ்வேளையில் கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரியில் நடைபெற்ற மகாநாடொன்றில் முன்னைநாள் கல்முனைத் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினரும் அமைச்சருமான கேட் முதலியார் எம். எஸ். காரியப்பருடன் அமர்ந்திருக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. மூன்று மாத சேவையுள்ள ஆசிரியர்களுக்குப் பயிற்சியின்போது முழுச்சம்பளம் வழங்குதல்
8. முஸ்லிம் மத்திய மகா வித்தியாலயங்களுக்கு அதிக அளவிலான மாணவ, மாணவிகளைச் சேர்த்துக் கொள்ளல்
9. பெரிய முஸ்லிம் பாடசாலைகளில் ஒன்றுக்கு மேற்பட்ட மௌலவி ஆசிரியர்களை நியமித்தல்
10. முஸ்லிம் பாடசாலைகளுக்கான கட்டிட வசதிகளை அமைத்தல்

இத்தகைய கோரிக்கைகள் உடனடியாக ஏற்கப்பட்டதோடு, காலக் கிரமத்தில் அமுல் செய்யவும்பட்டன.

1960 ஜுலையில் பதியுத்தீன் கல்வி, வானொலி அமைச்சரானார். அமைச்சரவையில் சுமார் மூன்றரை வருடங்கள் கல்வி, வானொலி அமைச்ச ராகவும், பின்னர் 1970 இல் இருந்து 77 வரை கல்வி அமைச்சராகவும் கடமையாற்றினார். இலங்கையில் இரு தடவைகள் கல்வி அமைச்சராகப் பதவி வகித்ததோடு, மிக நீண்டகாலம் கல்வி அமைச்சராக இருந்த பெருமையும் இவரையே சாரும். இவர் வானொலி அமைச்சராயிருந்த காலத்திலேயே அதன் முஸ்லிம் சேவை விஸ்தரிக்கப்பட்டது. இடையில் சில வருடங்கள் சுகாதார, வீடமைப்பு அமைச்சராகவும் கடமையாற்றினார்.

## நாடளாவிய மாற்றங்கள்

கல்வி அமைச்சு இவரின் கீழ் இருந்த கால கட்டங்களில் நாடு முழுவதற்கும் பொதுவான மூன்று மாற்றங்கள் இடம் பெற்றன.

1. பாடசாலைகள், ஆசிரியர் கலாசாலைகள் தேசிய மயமாக்கப்பட்டமை
2. பாடசாலைப் பாடவிதானத்தில் மாற்றங்கள் ஏற்படுத்தப் பட்டமை
3. பல்கலைக்கழகங்கள் புனரமைக்கப்பட்டமை ; பல்கலைக்கழக அனுமதி முறையில் மாற்றங்கள் செய்யப்பட்டமை

1960 இல் இந்நாட்டில் அரசாங்கப் பாடசாலைகள், உதவி நன்கொடை பெறும் பாடசாலைகள், தனியார் பாடசாலைகள் எனும் அமைப்புக்கள் இருந்தன. இப்பாடசாலைகளில் உள்ள கல்வி வசதிகளிலும் ஏற்றத்தாழ்வுகள் காணப் பட்டன. இந்நிலையினை நீக்கி நாட்டின் சகல பிரதேசங்களிலுமுள்ள எல்லா மாணவர்களும் கல்வியில் சம வாய்ப்பினைப் பெறும் பொருட்டு உதவி நன்கொடை பெறும் பாடசாலைகள் அனைத்தும் அரசுடைமையாக்கப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்திட்டத்திற்குப் பெரும் எதிர்ப்பிருந்த போதிலும் அது நிறைவேற்றப்பட்டது. இதற்கான சட்டம் 1960 அக்டோபர் 28 ஆந் திகதி நாடாளுமன்றத்தில் நிறைவேறியது. அதனை ஆதரித்து 101 வாக்குகளும் எதிர்த்து 44 வாக்குகளும் கிடைத்தன. தான் நீண்ட காலம் அதிபராய் இருந்து மிக நேசித்த கம்பளை ஸாஹிராக் கல்லூரியை அரசிடம் முதன்முதல் ஒப்படைத்தார்.

இரண்டாவது, 1972 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தொடக்கம் பாடசாலைப் பாடவிதான முறையில் ஏற்படுத்தப்பட்ட மாற்றங்கள் முக்கியமானவையாகும். 20 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இருந்து இந்நாட்டின் பாடவிதான முறையிற் சிறுசிறு மாற்றங்கள் செய்யப்பட்டபோதிலும், மொத்தமான மாற்றமொன்று 72 ஆம் ஆண்டிலேயே மேற்கொள்ளப்பட்டது.

மூன்றாவது, பல்கலைக்கழகக் கல்வி முறையிலும் பெரும் புனரமைப் பொன்று இவர் கல்வி அமைச்சராயிருந்த காலத்தில் மேற்கொள்ளப்பட்டது.

"பல்லாண்டு கால பல்கலைக்கழக வரலாற்றின் முடிவில் 1970 ஆம் ஆண்டில் அரசாங்கம் எதனைக் கண்டது ? அவ்வாண்டில் பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட பட்டதாரிகள் வேலையற்றிருந்தனர். இவர்களுள் 99 சதவீதமானோர் சிங்களம், பாளி, சமஸ்கிருதம், தமிழ், வரலாறு, பொருளியல் போன்ற பாடங்களைக் கற்ற கலைப்பட்ட தாரிகளாவர். மறுபுறத்தில் நாட்டின் அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்குப் பொருத்தமான பட்டதாரிகள் இல்லா திருந்தனர். இப்பட்டதாரிகளுள் பெரும்பாலா னோருக்குக் கல்வி அமைச்சு ஆசிரிய நியமனங்களை வழங்கியது. இவர்களின் பாடங்களைக்கொண்டு பாடசாலைகள் பெரும் நன்மையடையும் எனக் கூறமுடியாது.

உலகின் ஏனைய சில பகுதிகளில் பல்கலைக்கழகங்கள் தமக்கெனச் சில துறைகளில் நிபுணத்துவம் பெற்றுப் புகழுடன் விளங்குகின்றன. இருபத்தி ஐந்து வருட வளர்ச்சியின் பின்னரும்கூட எமது பல்கலைக்கழகங்கள் எதுவுமே அவ்வாறு பெருமை பாராட்ட முடியாது. திறமைக் குறைவினாலோ, வளங்கள் தட்டுப்பாட்டி னாலோ இது ஏற்பட்டதல்ல. இதற்கான முக்கிய காரணம் எல்லா வளங்களும், திறமைகளும் சிதறுண்டு கிடந்தமையேயாகும்.

கிராமப்புறங்களில் இருந்து பல்கலைக்கழகம் வரும் மாணவர்கள் சிங்களம், வரலாறு, பாளி போன்ற பாடங்களை பல்கலைக்கழகங்களிற் கற்று அக்கிராமப் பாடசாலைகளுக்குப் பட்டதாரி ஆசிரியர்களாகச் சென்று, அதே பாடங்களையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பிக்கின்றனர். இந்நிலை எப்போதோ ஒழிக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அவ்வாறு நடைபெறவில்லை. எமது பல்கலைக்கழகங்கள் இம்மாணவர்கள் பாடசாலைகளில் கற்ற அதே பாடங்களைத் தொடர்ந்து கற்பதற்குத் தாராளமாக இடம் வழங்கின. மாணவர்களும் அவ்வாறே செய்ய விரும்பினர். ஏனெனில் தமக்குப் பரிச்சயமான பாடங்களை நம்பிக்கையுடன் கற்கக்கூடியதாக இருந்தது. கிராமப்புறப் பாடசாலைகள் ஒரு குறுகிய காலத்திற்கே இக்கலைப்பட்டதாரிகளுக்கு வேலை வழங்க முடிந்தது. காலக்கிரமத்தில் வேலையற்றோர் பட்டாளத்துடன் இப்பட்டதாரிகள் சேர வேண்டி ஏற்பட்டது. வேறு எங்கணுமே இவர்களது சேவை வேண்டப்படவில்லை. திட்டமிடல் அமைச்சின் பட்டதாரிகள் வேலைப்பிரிவு மேற்கொண்ட ஓர் ஆய்வு இதனை வெளிப்படுத்துகின்றது.” [6]

எனக் கலாநிதி பதியுத்தீன் மஹ்மூத் குறிப்பிட்டார்.

இத்தகைய நிலைமையொன்றை மாற்றி அமைப்பதற்காகப் பல்கலைக் கழகங்கள் ஒரே அமைப்பின் கீழ் கொண்டுவரப்பட்டன. ஆயினும் 1977 இல் ஏற்பட்ட அரசாங்க மாற்றத்தோடு இம்முறை கைவிடப்பட்டது.

இலங்கையின் இரண்டாவது மருத்துவக் கல்லூரி பேராதனையில் இவரது காலத்திலேயே ஆரம்பிக்கப்பட்டது.

வித்தியோதயப் பல்கலைக்கழகம் 1960 ஆகஸ்ட் 7 இல் நடத்திய முதலாவது பட்டமளிப்பு விழாவில் இவருக்கு டி.லிட் (கௌரவ இலக்கிய கலாநிதி) பட்டம் வழங்கிக் கௌரவித்தது.

தமிழருக்கும், முஸ்லிம்களுக்கும் கலாசாரப் பல்கலைக்கழகங்களை நிறுவுவதற்கான முயற்சிகளும் 1960 களில் மேற்கொள்ளப்பட்டன. யாழ்ப்பாணத் திலுள்ள இராமநாதன் கல்லூரி, பரமேஸ்வராக் கல்லூரி ஆகியவிரண்டையும் இணைத்துப் பல்கலைக்கழகம் நிறுவுவதற்கான திட்ட அறிக்கையை எஸ். நடேசன் தயாரித்தார்.

அதேபோன்று முஸ்லிம் கலாசாரப் பல்கலைக்கழகத்தைக் கொழும்பு ஸாஹிராக் கல்லூரி வளவினுள் நிறுவுவதற்கான திட்ட அறிக்கையை எ. எம். எ. அஸீஸ் தயாரித்தார்.

1958 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட 45 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலம் வித்தியோதய, வித்தியாலங்காரப் பல்கலைக்கழகங்கள் நிறுவப்பட்டமையே இதற்கான உத்வேகத்தை அளித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முஸ்லிம் கலாசாரப் பல்கலைக்கழகம் நிறுவுதல் தொடர்பான திட்ட அறிக்கையை 1961 மார்ச் 11 ஆம் திகதி எ. எம். எ. அஸீஸ் சமர்ப்பித்தார். ஆயினும் கொழும்பு ஸாஹிராக் கல்லூரியை அரசாங்கம் பொறுப்பெடுத்ததை எதிர்த்து வழக்கு நடைபெற்றுக் கொண்டிருந்த காரணத்தால், இத்திட்டத்தை முன்னெடுத்துச் செல்ல முடியவில்லை.

எனினும் கலாநிதி பதியுத்தீன் மீண்டும் கல்வி அமைச்சரா யிருந்த காலத்திலேயே யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் 1974 அக்டோபர் 5 ஆம் திகதி பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கா வினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

## முஸ்லிம் கல்வி முன்னேற்றம்

கலாநிதி பதியுத்தீன் கல்வி அமைச்சராகப் பதவி வகித்த காலத்தில் முஸ்லிம்களுக்கு ஆற்றிய சேவைகள் அவர்களது கல்வி வரலாற்றில் பெரும் திருப்பத்தை ஏற்படுத்தின. கல்வியிற் பின்தங்கியிருந்த முஸ்லிம் சமுதாயம் துரிதமாக முன்னேறுவதற்கான வழிகள் பலவற்றினை அவர் அமைத்துக் கொடுத்தார்.

முதலாவது, கல்வித்திட்டத்தில் இஸ்லாமிய இலக்கியங் களுக்குத் தனிப்பாடத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இதற்கு முற்பட்ட காலத்தில் இஸ்லாமிய இலக்கியங்கள் எதுவுமே பாடத்திட்டத்தில் இருக்கவில்லை. ஆனால் இப்போது இஸ்லாமிய இலக்கியங்களும் பாடத்திட்டத்திற் புகுத்தப்பட்டு முஸ்லிம் மாணவர்கள் அவற்றைக் கற்கக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டது. இதனைத் தொடர்ந்து அறபு, இஸ்லாம், இஸ்லாமிய நாகரீகம் ஆகிய பாடங்களும் பல்கலைக் கழகப் புகுமுக வகுப்புகளிலும் பிரபல்யம் அடையத் தொடங்கின.

இரண்டாவது, அறபு ஆசிரியர் நியமனத்தில் சடுதியான ஒரு முன்னேற்றம் ஏற்பட்டது. இலங்கையிலும், இந்தியாவிலும் உள்ள அறபு மத்ரஸாக்களில் கற்று வெளியேறும் உலமாக்கள் எவ்வித தொழில் வாய்ப்புமின்றி இருந்தனர். சேர். ராஸிக் பரீத் சட்டசபை அங்கத்தவராய் இருந்த காலத்தில் மேற்கொண்ட முயற்சிகளின் விளைவாய் மௌலவிகளைப் பாடசாலைகளில் அறபு ஆசிரியர்களாக நியமிக்கும் வழக்கம் ஏற்பட்டது. இதற்கு முன்னர் இவர்களுக்கு எத்தொழில் வாய்ப்பும் இருக்கவில்லை. போதிய பொருளாதார வசதி இவர்களுக்கு இல்லாதிருந்த காரணத்தினால் சமுதாய அந்தஸ்தும் குறைவாகவே இருந்தது. அறபு ஆசிரியர்களாக இவர்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நியமிக்கப்படத் தொடங்கியவுடன் நிலையான தொழில் வாய்ப்பைப் பெறக்கூடிய சந்தர்ப்பம் ஏற்பட்டது. பதியுத்தீன் மஹ்மூத் அமைச்சரானதும் பெருந்தொகையான மௌலவிகள் அறபு ஆசிரியராக நியமனம் பெற்றனர்.

வெவ்வேறு மத்ரஸாக்களும் மாறுபட்ட பாடத்திட்டங்களைக் கொண்டிருந்த காரணத்தால் அவற்றிற்கிடையே சமன்பாடொன்றினை ஏற்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அதற்காக அல்-ஆலிம் பரீட்சை இவரால் அறிமுகப்படுத்தப்பட்டது.

மௌலவிமார் கற்பித்தல் பயிற்சி பெறுவதற்காக அறபுப் பாடநெறி அட்டாளைச்சேனை ஆசிரிய கலாசாலையிலும், அளுத்கமை ஆசிரிய கலா சாலையிலும் ஆரம்பிக்கப்பட்டன. இதனால் மௌலவிமார் சிறந்த ஆசிரியர்களாக மாறுவதற்கான வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டது.

மூன்றாவது, ஆசிரிய நியமனங்களிலும், கல்வி நிதிஒதுக்கீட்டிலும் திட்டவட்டமான முறையொன்று கையாளப் பட்டது. ஆசிரிய நியமனங்கள் செய்யப்பட்டபொழுது சனத்தொகை விகிதாசார அடிப்படையில் சிங்களவருக்கு 80 வீதமும் தமிழருக்கு 12 வீதமும் முஸ்லிம்களுக்கு 8 வீதமும் வழங்கப்பட்டது. இதனால் முஸ்லிம்கள் பெருந்தொகையாக ஆசிரிய நியமனம் பெற முடிந்தது. அதனால் கல்வித்துறையில் அவர்களிடையே மலர்ச்சியும், புதிய உத்வேகமும் ஏற்பட்டன.

நான்காவது, ஆசிரியர் நியமனத்தில் முஸ்லிம்களின் தொகை அதிகரித்த காரணத்தினால் ஆசிரியப் பயிற்சியிலும் அவர்களின் தொகை அதிகரித்தது. தமிழ் மொழி மூலம் விசேட பாடநெறிகள் கற்பிக்கப்பட்ட ஒரேயொரு பயிற்சிக் கலாசாலையான பலாலி ஆசிரியர் கலாசாலைக்கு அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை இவ்வதிகரிப்பினை எடுத்துக் காட்டும். [7]

| *வருடம்* | *அனுமதிக்கப்பட்ட முஸ்லிம் மாணவர்களின் எண்ணிக்கை* |
|---|---|
| 1958 | 01 |
| 1959 | 24 |
| 1960 | 11 |
| 1961 | 20 |
| 1962 | 58 |
| 1963 | 50 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| 1964 | 39 |
| 1965 | 35 |
| 1966 | 20 |
| 1967 | 27 |
| 1968 | 21 |
| 1969 | 17 |
| 1970 | 24 |
| 1971 | 157 |
| 1972 | 123 |
| 1973 | 101 |
| 1974 | 137 |
| 1975 | 151 |

முஸ்லிம்களுக்கான அட்டாளைச்சேனை, அளுத்கமை ஆசிரிய கலாசாலைகள் அவற்றின் ஆரம்ப காலந்தொட்டுப் பொது நெறியைப் போதிப்பனவாக மட்டுமே இருந்தன. பதியுத்தீன் கல்வி அமைச்சரா யிருந்த காலத்தில் விசேட பாடநெறிகளும் அங்கு ஆரம்பிக்கப் பட்டன. விஞ்ஞானம், கணிதம், சமூகக் கல்வி, தமிழ், இஸ்லாம், அறபு, ஆங்கிலம் என்பன அவ்வாறு ஆரம்பிக்கப்பட்ட விசேட பயிற்சி நெறிகளாகும். இவற்றைக் கற்பிப்பதற்கான கட்டிட, தளபாட, உபகரண, விரிவுரையாளர் வசதிகளும் அதிகரிக்கப்பட்டன.

ஐந்தாவது, கல்வி நிருவாகச் சேவையிலும் பெருந்தொகையான முஸ்லிம்கள் நியமனம் பெற்றது இவரது பதவிக் காலத்திலேயாகும். மகா வித்தியாலய அதிபர்களாகவும், கல்வி அதிகாரிகளாகவும், கல்விப் பணிப்பாளர்களாகவும், பரீட்சைத் திணைக்கள அதிகாரிகளாகவும் முஸ்லிம்கள் பதவி உயர்வு பெற்றனர்.

ஆறாவது, பெண் கல்வியிலும் பதியுத்தீன் மிகுந்த அக்கறை செலுத்தினார். " சமுதாயத்தின் முன்னேற்றம் பெண் கல்வியில்தான் தங்கியுள்ளது. ஆண்கள் கல்வி பயில்வது போன்று பெண்களும் சமஉரிமையுடன் கல்வி பயில்வது அவசியமாகும். ஆண், பெண் இருபாலாரும் கல்வி பயில வேண்டியதன் அவசியத்தை இஸ்லாம் வலியுறுத்துகிறது. இஸ்லாத்தின் கலாசாரப் பண்புகளுக்கு அமைவாக இந்நாட்டிலுள்ள முஸ்லிம்களுக்கு கல்வி போதிப்பதற்கான சகல வசதிகளையும் ஏற்படுத்துவதே எனது முக்கிய நோக்கமாகும். எனவே உங்களது ஆண்பிள்ளைகளையும், பெண் பிள்ளைகளையும் கல்வி கற்க வசதி செய்யுங்கள். கல்வி கற்காததனால் முஸ்லிம்கள் இந்த நாட்டிலே பெறக்கூடிய உயர் பதவிகளை இழந்து வருகின்றனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1973 இல் கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரிக்கு விஜயம் செய்தபொழுது, விஞ்ஞானகூடத்தைத் திறந்து வைத்தபின், அதனைப் பார்வையிடுகின்றார். கல்முனை நாடாளுமன்ற உறுப்பினர் எம். ஸி. அஹமது அருகே நிற்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1973 இல கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரியில் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறியாமையும், பிற்போக்கு மனப்பான்மையும், மூடப்பழக்க வழக்கங்களும் குடிகொண்டிருந்ததனால், சீனா சென்றாயினும் கல்வியைத் தேடிக் கொள்ளுங்கள் என்ற பெருமானாரின் உயரிய போதனைகளை முஸ்லிம்கள் புறக்கணித்து விட்டனர்.'' [8] என பதியுத்தீன் மிக ஆணித்தரமாகப் பல சந்தர்ப்பங்களில் குறிப்பிட்டுள்ளார். இதனால் அவர் கல்வி அமைச்சராயிருந்த காலத்தில் முஸ்லிம் பெண் கல்வி வளர்ச்சிக்கான எல்லா ஊக்கங்களும் அளிக்கப்பட்டன. குறிப்பாக கல்முனை, கண்டி ஆகிய இடங்களில் அவரால் ஆரம்பிக்கப் பட்ட மகளிர் மகா வித்தியாலயங்கள் இன்று மிகத் துரிதமாக வளர்ந்து வருகின்றன.

இத்தகைய கல்விப் பணிகள் மூலம் சமீபகால முஸ்லிம் வரலாற்றில் பதியுத்தீனின் நாமம் மிக முன்னணியில் திகழ்கின்றது. 1974 அக்டோபர் 26 ஆந் திகதி காத்தான்குடியில் "காயிதே மில்லத்" (சமூகத் தலைவன்) பட்டமளித்துக் கௌரவிக்கப்பட்டார்.

## கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி

பெண்களின் கல்வி முன்னேற்றத்தில் பதியுத்தீன் கொண்டிருந்த இலட்சியத்தினை நிறைவேற்றுவதில் முக்கிய இடத்தினை இன்று கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி வகிக்கிறது. 1968 ஆம் ஆண்டு இஸ்லாமிய சோஷலிஸ முன்னணியின் மகாநாடு கல்முனையில் மிகப் பிரமாண்டமான முறையில் நடைபெற்றது. அம்மகாநாட்டின் தலைமை உரையை ஆற்றும்போது, தான் பதவிக்கு வந்தால் அம்மகா நாடு நடைபெறும் இடத்திலேயே பெண்களுக்கான கல்லூரி ஒன்று அமைக்கப்படும் என்று அவர் வாக்குறுதி அளித்தார். வாக்களித்தது மட்டுமல்லாமல் அதனை நிறைவேற்றியும் வைத்தார்.

1970 தேர்தலின் பின்னர் அமைக்கப்பட்ட அமைச்சரவையில் பதியுத்தீன் கல்வி அமைச்சராக நியமிக்கப்பட்ட குறுகிய காலத்துள் 5.1.1971 இல் மஹ்மூத் மகளிர் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது. மகாநாடு நடைபெற்ற இடத்திலே சாய்ந்தமருது அல்-அமான் வித்தியாலயம் என ஒரு பாடசாலை இருந்தது. அரை ஏக்கர் நிலத்தில் இரு சிறு கட்டிடங்கள், ஒரு கிணறு, ஒரேயொரு மலசலகூடம் என்பவற்றைக் கொண்ட மிகச்சிறியவொரு பாடசாலை இதுவாகும். இதுவே மஹ்மூத் மகளிர் கல்லூரியின் முதலாவது வள வசதியாகும்.

1971 ஜனவரி 5ஆந் திகதி கல்முனை ஸாஹிராக் கல்லூரியில் கற்றுக் கொண்டிருந்த எல்லா மாணவிகளும்; கல்முனைக்குடி, சாய்ந்தமருது ஆகிய இரு ஊர்களிலுமுள்ள பத்துக்கும் மேற்பட்ட


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலைகளில் கற்றுக் கொண்டிருந்த 6 ஆம் வகுப்புக்கு மேற்பட்ட மாணவிகளும் அப்பாடசாலைகளிற் கடமையாற்றிக் கொண்டிருந்த ஆசிரியைகளும் அங்கு அனுப்பப்பட்டனர்.

ஸாஹிராக் கல்லூரியில் பிரதி அதிபராகக் கடமையாற்றிக் கொண்டிருந்த எம். சி. ஏ. ஹமீத் அவர்கள் அதிபராக நியமிக்கப் பட்டார். அன்றிலிருந்து 23.09.84 வரை தொடர்ச்சியாகக் கடமையாற்றி இக்கல்லூரியின் இன்றைய வளர்ச்சிக்கான வழிகாட்டலையும், ஸ்திரத்தன்மையையும் கொடுத்தவர் அவரே ஆவார். அவரைத் தொடர்ந்து அதிபர் பதவியில் அமர்ந்த அல்ஹாஜ். ஏ. எச். ஏ. பஷீர் அவர்கள் இன்றுவரை அவ்வளர்ச்சிப் பாதையில் கல்லூரியை வேகமாக வழிநடத்திச் செல்வது பாராட்டுக்குரியதே.

ஆரம்பித்த ஒரு வாரத்தினுள் 864 மாணவிகள் சேர்ந்து விட்டனர். அவர்களுக்கான ஓலைக் கொட்டில்கள் உடனடியாக அமைக்கப்பட்டதோடு ஏனைய அடிப்படை வசதிகளும் செய்யப் பட்டன. கல்முனைத்தொகுதியின் அப்போதைய நாடாளுமன்ற உறுப்பினர் அல்ஹாஜ் எம். சி. அஹமத் அவர்களுடைய தலைமை யின்கீழ் அப்பிரதேச மக்கள் அனைவரும் பூரண ஒத்துழைப்பு வழங்கியதன் காரணமாக இக்கல்லூரி துரித முன்னேற்றம் அடைந்தது.

தன்னால் ஆரம்பிக்கப்பட்ட கல்வி நிறுவனத்தைப் பார்ப்பதற் காக 1973 செப்டெம்பர் 1ஆந் திகதி வருகை தந்த பதியுத்தீனுக்கு பிரமாண்டமான வரவேற்பு அளிக்கப்பட்டது. அவ்வேளையில் நிலைமைகளை நேரடியாக அவதானித்து மேலும் பல வசதிகளை அவர் வழங்கினார். அரை ஏக்கர் நிலத்தில் ஆரம்பிக்கப்பட்ட இக்கல்லூரி இன்று 5 ஏக்கர் நிலப்பரப்பில் சகல வசதிகளையும் கொண்டு தலைசிறந்த அகில இலங்கைக் கல்வி நிறுவனமாக விளங்குகிறது. இன்று 2700 மாணவிகளையும், 100 ஆசிரிய, ஆசிரியைகளையும், விடுதியில் 150 மாணவிகளையும் கொண்டு விளங்கும் இக்கல்லூரி பதியுத்தீனின் பெண் கல்வி முன்னேற்ற முயற்சிகளுக்கான நிரந்தரச் சான்றாகும்.

## மொழிக்கொள்கை

இவரது மொழிக்கொள்கையிலும் மாற்றம் ஏற்படுவதைக் காண்கின்றோம். தனது பொது வாழ்வின் ஆரம்ப காலத்தில் சிங்களமே முஸ்லிம்களின் கல்வி மொழியாக இருக்கலாம் எனும் கொள்கையைக் கொண்டிருந்தார். காலக்கிரமத்தில் இதை முற்றாகக் கைவிட்டுத் தமிழ்மொழி மூலமே முஸ்லிம்கள் கல்வி பெற வேண்டும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என வலியுறுத்தினார். நாடெங்கணும் நடைபெற்ற பல்வேறு கூட்டங்களின்போதெல்லாம் இக்கொள்கையினை அவர் வலியுறுத்தத் தவறுவதில்லை.

## இலட்சிய நோக்கு

இந்நாட்டு முஸ்லிம்களின் கல்வி வரலாற்றில் பெரும் முன்னேற்றத்தை ஏற்படுத்தியவர் பதியுத்தீனாகும். கல்வித்துறை மலர்ச்சியின் மூலம் சமுதாய முன்னேற்றம் ஏற்பட்டு இந்நாட்டு முஸ்லிம்களும் சிறப்பான வாழ்வை அடைய வேண்டுமென்று அவர் விரும்பினர். அவர் கூறுகிறார்:

"என்னுடைய முழுமையான நம்பிக்கை என்னவென்றால் இலங்கைவாழ் முஸ்லிம்களின் நல்வாழ்வுக்குச் செய்ய வேண்டிய முக்கிய பணி புதிய குடியரசின் வாழ்க்கையில் சுதந்திரமாகவும், நேர்மையாகவும், ஆக்கபூர்வமாகவும் ஈடுபடுவதாகும். சிறுபான்மை மக்களின் நல்லெண்ணம் மிக முக்கியமானதாகும். நல்லெண்ணம் தானாக உருவாகும் என்று எதிர்ப்பார்த்துக் கொண்டும், நம்பிக்கை கொண்டும் நாம் சும்மா இருத்தல் கூடாது. நம் நாட்டின் பல்வேறு இன மக்களிடையே துவேஷம் பரப்பும் மனிதர்களை அகற்றி நல்லெண்ணம் உருவாக்கும் நல்ல சக்திகளை பலப்படுத்துவதற்காக நாம் தீவிரமாகப் பாடுபட வேண்டும். முந்திய நூற்றாண்டுகளில் முஸ்லிம்கள் இஜ்திஹாத்தை (கலந்துரையாடலும், முடிவு செய்தலும்) கதவடைத்து விட்டதால் முன்னேற்றமும் வளர்ச்சியும் ஏற்படாமல் போய்விட்டன. புதிதாக உருவாகிவரும் தற்கால உலகிற்கு ஏற்றவாறு நமது மார்க்க ஆசாரங்களை புனரமைப்புச் செய்யும் முயற்சிகள் தொடர்ப்பற்றனவாகவும், பயனற்றனவாகவும் அமைந்து விட்டன.

உலக அரங்கில் முஸ்லிம்கள் கௌரவமான இடம்பெற ஒரேயொரு வழிதான் உண்டு. இஸ்லாம் காட்டிய வழியில் நின்று இன்றைய சமுதாய வாழ்க்கைக்கு ஏற்ற நடைமுறைக் கோட்பாடுகளை வகுத்தலாகும். மனித அறிவு, பண்பாடு, நாகரீகம் ஆகியவற்றின் எல்லைகள் பரந்து விரிந்து கொண்டிருக்கும் வேளையில் முஸ்லிம்கள் இஸ்லாத்தின் கோட்பாடுகளை இந்த வளர்ச்சிக்கு ஏற்ப விளங்கிக் கொள்ள வேண்டும்.

முஸ்லிம்கள் என்ற அடிப்படையில் நாம் மனிதனின் அடிப்படைச் சுதந்திரத்திலும், அடிப்படைச் சமத்துவத்திலும், அடிப்படைச் சகோதரத்து வத்திலும் நம்பிக்கை உடையவர்கள். நமது பரிசுத்த குர்ஆன் நம்முடைய அலுவல்களை நாம் கலந்து பேசித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீர்த்துக் கொள்ள வேண்டும் என்று கூறுவதால் அது ஜனநாயகத்துக்கு வழிகாட்டுகிறது.

நாங்கள் முஸ்லிம்கள் என்பதில் பெருமை அடைகிறோம். 1400 ஆண்டுகளாக இஸ்லாத்தின் அரவணைப்பில் வளர்ந்த விலைமதிப் பற்ற ஓவியக் கலைக்கும், கட்டடக் கலைக்கும், பண்பாட்டிற்கும், நாகரீகத்திற்கும், கவின் கலைகளுக்கும், கவிதைகளுக்கும் உரிய வாரிசுகள் என்பதில் பெருமையடை கிறோம். அதே சமயத்தில் நமது தாய் நாடானதும் நமது மூதாதையர்கள் 2600 ஆண்டுகள் வாழ்ந்ததுமான இலங்கைக் குடியரசின் குடிமக்களாய் இருப்பதிலும் நாம் பெருமையடைகிறோம். இலங்கையின் தேசிய தனித்துவத்தின் பிரிக்க முடியா ஒற்றுமையின் ஓர் அங்கம் நாம். ஒவ்வொரு முஸ்லிமின் சீரிய உன்னத கடமை என்னவென்றால் இலங்கைக் குடியரசின் ஒற்றுமைக்கும், வலிமைக்கும், இறைமைக்கும் அச்சமின்றி, சுயநலமின்றி நேர்மையாக உழைத்தலாகும்." "



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1993 ஆம் ஆண்டு கண்டி டி. எஸ். சேனநாயக்கா மண்டபத்தில் நடைபெற்ற ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கண்டி மாவட்டப் பேராளர் மகாநாட்டில் பதியுத்தீன் மஹ்மூத் கௌரவிக்கப்பட்டார். ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசியத் தலைவர் எம். எச். எம். அஷ்ரஃப் அவருக்குப் பொன்னாடை போர்த்த, மூத்த துணைத் தலைவர் மருதூர்க்கனி மாலையிட, தவிசாளர் சட்டத்தரணி எச். எம். பாரூக் நினைவுச் சின்னத்தை வழங்குகிறார். டாக்டர் ஐ. எம். இலியாஸ் எம்.பி., டாக்டர் ஏ. உதுமாலெவ்வை, எம். ரி. ஹஸன் அலி, ரவூப் ஹக்கீம் எம். பி. ஆகியோரும் அருகே நிற்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




1995 இல் முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களம் வெலிகமையில் நடாத்திய தேசிய மீலாத் விழாவில் சிறப்பதிதியாக பதியுத்தீன் மஹ்மூத் கலந்து கொண்டார். மேடையில் (இடமிருந்து வலம்) மாண்புமிகு அமைச்சர்களான செய்யத் அலவி மௌலானா, எம். எச். எம். அஷ்ரஃப், லக்ஷ்மன் ஜயகொடி, பதியுத்தீன் மஹ்மூத், மங்கள சமரவீர, ஏ. எச். எம். பௌசி ஆகியோர் அமர்ந்திருக்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அடிக்குறிப்புகள்

1. ஹஸன் எஸ். எம். ஏ, கலாநிதி பதியுத்தீன், கண்டி 1974
2. அதே நூல் ப: 36
3. அதே நூல் ப: 141 - 143
4. காலிதீன் கே. எம். எச்., "இலங்கை முஸ்லிம்களின் கல்வி, அரசியல் எழுச்சியில் கலாநிதி பதியுத்தீன் மஹ்முத் அவர்களின் பங்களிப்பு", யாழ்பிறை - 1981 ப: 13
5. பதியுத்தீன் மஹ்முத், முஸ்லிம்களின் பெருமை நிலைநாட்டப்பட்டது,
   இஸ்லாமிய சோசலிஷ முன்னணி வெளியீடு, 1968 ப : 18
6. Badi - Ud - din Mahmud, **"Viscious Circle of Varsity Education"** Ceylon Daily News, July 15, 1972
7. யாழ்பிறை - 1981, இஸ்லாமிய மஜ்லிஸ் வெளியீடு, பலாலி ஆசிரியர் கலாசாலை, வசாவிளான்
8. பதியுத்தீன் மஹ்முத் : பேட்டி 16.01.1981; 17.01.1981; 18.12.1994; 20.08.1996
9. Badiudin Mahmud, Al - Haj Dr., **We Welcome our Prime Minister,**
   Souvenir of the Mass Meeting on 30th September 1972, Colombo pp 43 - 44
10. கலாநிதி பதியுத்தீன் மஹ்முத் 1997 ஜூன் 16ஆம் திகதி திங்கட்கிழமை அதிகாலையில் காலமானார். அவரது ஜனாஸா அன்று மாலை மாளிகாவத்தை மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டது. அதனைத் தொடர்ந்து 1997 ஜூன் 18,19,21, 23 ஆம் திகதிகளில் தினகரன் பத்திரிகை தொடர்கட்டுரைகளாகப் பிரசுரித்ததன் தொகுப்பே இந்நூல். அப்பத்திரிகைக்கும், அதன் பிரதம ஆசிரியர் ஆர். அருளானந்தம் அவர்களுக்கும் நன்றிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதியுத்தீன் மஹ்மூத் தொடர்பான நூல்கள்

1. Darrel Pieris
Badiudeen - Pioneer of a New Age
1939 July 1
Reprinted by M.M. Hidayathulla, Dickwella
1977 February 6

2. கலாநிதி அல்ஹாஜ் பதியுத்தீன் மஹ்மூத்
முஸ்லிம்களின் பெருமை நிலைநாட்டப்பட்டது
கல்முனை/ இஸ்லாமிய சோஷலிஸ முன்னணி மாநாடு
1968 ஆகஸ்ட் 14 ப : 20

3. Dr. Alhaj Badiuddin Mahmud
Muslim Dignity Restored
Kalmunai/ Islamic Socialist Front Conference
1968 August 14 p : 18

4. எஸ். எம். ஏ. ஹஸன்
பதியுத்தீன் மஹ்மூத்
கொழும்பு/ இஸ்லாமிய சோஷலிஸ முன்னணி
1968 ப : 18

5. பதியுத்தீன் மஹ்மூத் - வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கம்
கொழும்பு/ இஸ்லாமிய சோஷலிஸ முன்னணி
1969 ப : 18

6. A Brief Life Sketch of Dr. Alhaj Badiuddin Mahmud
Colombo/ Islamic Socialist Front
1969 p : 23

7. Badiuddin Mahmud
The Muslim Case in the Constituent Assembly
Colombo
1970 p : 17

8. எஸ். எம். ஏ. ஹஸன்
கலாநிதி பதியுத்தீன்
கண்டி/ இலங்கை இஸ்லாமிய எழுத்தாளர் இயக்கம்
1974 ப : 200 ரூபா 15/=


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. கலாநிதி பதியுத்தீன் மஹ்மூத்
நான் அறிந்த பண்டாரநாயக்கா
கொழும்பு/ கல்வி வெளியீட்டுத் திணைக்களம்
1975 ப : 36

10. ஏ. டபிள்யூ. எம். ஹன்ஸீர்
எங்கள் தலைவர் பதியுத்தீன்
கொழும்பு/ கல்ஹின்னைத் தமிழ் மன்றம்
1989 ப : 1105 ரூபா 200/=



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூலாக்கத்தில் உதவிய பின்வருவோருக்கு நன்றிகள்

★ எஸ். எம். கமால்தீன்
பணிப்பாளர் சபை உறுப்பினர், தேசிய நூலக சேவைகள் சபை

★ எம். எம். எம். மஹரூப்
ஓய்வுபெற்ற சிரேஷ்ட உதவிப் பணிப்பாளர்
முஸ்லிம் சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்

★ தாரிக் மஹ்மூத்
கலாநிதி பதியுத்தீன் மஹ்மூத் அவர்களின் புதல்வர்

★ நபீலா அலி
சுருக்கெழுத்தாளர்

★ ஏ. எச். ஏ. பஷீர்
அதிபர், மஹ்மூத் மகளிர் கல்லூரி, கல்முனை

★ அ. லெ. மு. ராசிக்
முன்னைநாள் செயலாளர், அகில இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கம்

★ எம். எம். ஜுனைத்
உதவிப் பணிப்பாளர், முஸ்லிம் சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியரின் வெளியீடுகள்

| | |
|---|---|
| ஏ. எம். ஏ. அஸீஸ் - கல்விச் சிந்தனைகளும், பங்களிப்பும் | 1980 |
| ஸேர். றாஸிக் பரீத் அவர்களின் கல்விப்பணி | 1984 |
| சாய்ந்தமருது ஜும்ஆப் பள்ளிவாசல் வரலாறு | 1989 |
| துவான் புர்ஹானுத்தீன் ஜாயா (மொழிபெயர்ப்பு) | 1990 |
| கல்விச் சிந்தனைகள் | 1990 |
| அநுராதபுர மாவட்ட முஸ்லிம்கள் (தொகுப்பு) | 1992 |
| நினைவில் நால்வர் | 1993 |
| கலாநிதி ஜாயாவின் கல்விப் பணிகள் | 1994 |
| அல்லாமா உவைஸ் (தொகுப்பு) | 1994 |
| சுவடி ஆற்றுப்படை - முதலாம் பாகம் | 1994 |
| சுவடி ஆற்றுப்படை - இரண்டாம் பாகம் | 1995 |
| கிராமத்து இதயம் - நாட்டார் பாடல்கள் | 1995 |
| இஸ்லாமியக் கல்வி | 1996 |
| கல்விச் சிந்தனைகள் - 2 ஆம் பதிப்பு | 1996 |
| சுவடி ஆற்றுப்படை - மூன்றாம் பாகம் | 1997 |
| அம்பாரை மாவட்ட முஸ்லிம்கள் (தொகுப்பு) | 1997 |
| கலாநிதி பதியுத்தீன் மஹ்மூதின் கல்விப் பணிகள் | 1997 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பசிபிக் அச்சகம் (பி) லிமிடெட் கொழும்பு 13.